<u>அசல் வழக்கு எண். 63/2022</u>

14.10.2025

**பெயர் – பாண்டியன்** (PW2)

**<u>சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

(1) நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை எதுவும் பெறவில்லை. நான் சொன்ன தகவலின் பேரில் பிரமாண வாக்குமூலம் தயார் செய்யப்பட்டது. அதில் உள்ள விவரங்கள் எனக்கு நேரடியாக தெரியும். மாசிலாமணி தனது வீட்டு இடம் சம்மந்தமாக வழக்கு தாக்கல் செய்துள்ளார். வழக்கில் என்ன பரிகாரம் கேட்கப்பட்டுள்ளது என்றால் வீடு, இடம் கேட்டு சம்மந்தமாக செல்லம்மாள் அடிக்கடி வந்து தொந்தரவு செய்வது சம்மந்தமாக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. நான் மாசிலாமணி வீட்டின் அருகில் குடியிருக்கிறேன். என் வீட்டின் கதவு எண். 1322 ஆகும். செல்லம்மாள் வீட்டிற்கு எந்த திசையில் குடியிருக்கிறேன் என்றால் தெற்கு பக்கம் உள்ளேன். சாட்சி மீண்டும் செல்லம்மாள் வீடு தனது வீட்டில் இருந்து 2 தெரு தள்ளி இருப்பதாக சொல்கிறார். நான் 30 வருடங்களுக்கு மேலாக அங்கு குடியிருக்கிறேன். நான் கூலி வேலை செய்கிறேன்.

(2) மாசிலாமணி எனக்கு உறவினர் இல்லை தெரிந்த நபர். செல்லம்மாள் எனக்கு தெரிந்த நபர். எனது முகவரியை காட்ட அடையாள அட்டை எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மாசிலாமணியின் கணவர் பெயர் சந்திரன் எனக்கு 30 வருடங்களுக்கு மேல் பழக்கம். சந்திரன் சிமெண்ட், இரும்பு கடைக்கு வேலைக்கு செல்கிறார். இடையில் ஓட்டுநராகவும் வேலைக்கு செல்வார் என்றால் சரிதான். தற்போது பழநிக்கு வேலைக்கு செல்கிறார். சந்திரன் மற்றும் மாசிலாமணியின் மகள் வீடு பழநியில் உள்ளது என்றால் சரிதான். சந்திரன் மற்றும் மாசிலாமணி இருவரும் அடிக்கடி பழநியில் தான் இருப்பார்கள் என்றால் சரிதான்.

(3) வழக்குச் சொத்து ஆரம்பத்தில் சோமசுந்தரம் மணியகாரருக்கு பாத்தியம். மாசிலாமணி எந்த வருடம் வழக்குச் சொத்தை வாடகைக்கு பிடித்தார் என்றால் எந்த வருடம் என்று குறிப்பிட்டு தெரியாது சுமார் 25 வருடங்கள் இருக்கும். மாசிலாமணி சோமசுந்தரம் மணியகாரர் மீது வழக்கு தாக்கல் செய்தார் என்றால் சரிதான். வழக்குச் சொத்து சம்மந்தமாக பத்திரம் செய்து தரச் சொல்லி வழக்கு போட்டார். அந்த வழக்கு

விவரம் தெரியும். பத்திரம் செய்து கொடுத்தார்கள் அதன் பின்பு தான் சந்திரன் கூரை போட்டார். சோமசுந்தரம் மற்றும் மாசிலாமணிக்கு தற்போது நல்ல உறவில் தான் உள்ளார்கள் பிரச்சனை எதுவும் இல்லை. செல்லம்மாளுக்கு 2 பெண் மக்கள் உள்ளார்கள். அதில் ஒருவர் மாற்றுத் திறனாளி. செல்லம்மாளும் மாற்றுத் திறனாளி. மாசிலாமணி 2007ம் வருடம் எங்கு குடியிருந்தார் என்றால் தற்போதிருக்கும் அதே இடத்தில் குடியிருந்தார். செல்லம்மாள் குடியிருக்கும் இந்த வழக்குச் சொத்தும் ஒன்று என்றால் சரியல்ல செல்லம்மாள் குடியிருக்கும் வீடு 2 வது வீதியில் உள்ளது.

(4) 2008ம் வருடம் ரூ.60 ஆயிரம் பணம் செல்லம்மாளிடம் மாசிலாமணி பெற்றுக்கொண்டு தாவாச் சொத்தில் குடியமர்த்தினார் என்றால் அதைப் பற்றி எனக்கு தெரியாது. தாவாச் சொத்தில் செல்லம்மாள் தான் தற்போது குடியிருக்கிறார் என்றால் சரியல்ல. செல்லம்மாள் மீது மாசிலாமணி தாக்கல் செய்த குற்ற வழக்கு பற்றி எனக்கு நேரடியாக தெரியாது. மாசிலாமணி மீது செல்லம்மாள் தாக்கல் செய்த குற்ற வழக்கு பற்றி எனக்கு நேரடியாக தெரியாது. வழக்கு விவரங்கள் எதுவும் தெரியாமல் வாதிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

DHEENADHAYALAN M

Digitally signed by DHEENADHAYALAN M
Date: 2025.10.14 16:42:21 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்